# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்குதல் (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

---

*[1988 நவம்பர் மாதம் 11 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1988 நவம்பர் மாதம் 11 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 75* *தபாற் செலவு : சதம் 75*

# 1988 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்குதல் (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

[1988, நவம்பர் 11 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச.வ—ஒ.70/88

**இந்திய வம்சாவழியினரான குறித்த சில நாடற்ற ஆட்களுக்கு இலங்கைப் பிரசாவுரிமை என்ற அந்தஸ்தை வழங்குவதற்கு ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டம்.**

பாயிரம்.

1986 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நாடற்ற ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்குதல் சட்டத்திற்கான பாயிரம், இலங்கையில் வதியும் இந்திய வம்சாவழியினரான 5,06,000 ஆட்களுக்கு, சொல்லப்பட்ட சட்டம் சட்டமாக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு முதல் எட்டு மாதங்களுக்குள் இந்தியப் பிரசாவுரிமை வழங்க இந்தியா உடன்பட்டிருக்கின்றதெனக் கூறுகின்றதாதலாலும் :

இந்தியப் பிரசாவுரிமை வழங்கப்படுவதற்கு இந்தியத் தூரதரகத்திற்கு விண்ணப்பித்திருந்த அத்தகைய ஆட்களுள் 4,22,000 ஆட்களுக்கு இற்றைவரை இந்திய அரசாங்கம் இந்தியப் பிரசாவுரிமை வழங்கியிருக்கின்றதாதலாலும், அத்துடன் மீதி 84,000 ஆட்களுக்கு இந்தியப் பிரசரவுரிமை வழங்கி அவர்களை இந்தியாவுக்குத் திருப்பியனுப்புதலை ஏற்றுக் கொள்கின்றதாதலாலும்:

1986 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்குதல் சட்டத்தின்கீழ் இந்திய வம்சாவழியினரான 4,69,000 ஆட்களுக்கும் அத்துடன் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினரான எஞ்சியுள்ள எவரேனும் நாடற்ற ஆட்களுக்கும் பிரசாவுரிமை வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் கடப்பாடுடையதாயிருக்கின்றதாதலாலும்:

இலங்கை அரசாங்கம் இற்றைவரை இந்திய வம்சாவழியினரான 2,36,000 ஆட்களுக்கு இலங்கைப் பிரசாவுரிமை வழங்கியிருப்பதுடன் எஞ்சியுள்ளவர்களுக்கும் பிரசாவுரிமை வழங்கக் கடப்பாடுடையதாயிருக்கின்றதாதலாலும்:

இலங்கை அரசாங்கம் சொல்லப்பட்ட சட்டம் சட்டமாக்கப்பட்டதிலிருந்து பதினெட்டு மாதங்களுக்குள் நாடற்றோர் பிரச்சினையைத் தீர்த்துவைக்கத் தீர்மானித்திருந்ததாக சொல்லப்பட்ட சட்டத்திலிருந்து தோன்றுகின்றதாதலாலும்:

எதிர்பாராத பல்வேறு சூழ்நிலைகளின் காரணமாக மேலே சொல்லப்பட்ட காலப்பகுதியின்போது சொல்லப்பட்ட கடப்பாடுகளை நிறைவேற்ற முடியவில்லையாதலாலும்:

ஆகவே, இப்பொழுது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப்பெயர்

1. இச்சட்டம் 1988 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்குதல் (சிறப்பேற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2—ட 001748—2,980 (10/88)

குறித்த சில நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்குதல்.

2. வேறேதேனும் சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும் —

(அ) இலங்கையில் சட்டமுறையாக வதியும் இந்திய வம்சாவழியினரான ;

(ஆ) நாடற்றவரான ; அத்துடன்

(இ) இந்தியப் பிரசாவுரிமைக்காக இந்தியத் தூதரகத்திற்கு விண்ணப்பித்துள்ளவர்களான, 1986 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்குதல் சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவர்களான ஆட்களுக்குள் இல்லாதவரும் ; அவர்களுக்கு 1964 ஒற்றோபர் 30 ஆம் தேதிக்குப்பின் பிறந்த பிள்ளைகளுமான

ஒவ்வோராளும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து இலங்கைப் பிரசை என்ற அந்தஸ்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், இலங்கையின் ஏனைய பிரசைகள் சட்டத்தினால் எந்த உரிமைகளுக்கும் சிறப்புரிமைகளுக்கும் உரித்துடையவர்களாயிருக்கின்றனரோ அந்த எல்லா உரிமைகளுக்கும் சிறப்புரிமைகளுக்கும் உரித்துடையவர்களாதலும் வேண்டும்.

இச்சட்டத்தின்கீழ் பிரசைகளாகும் ஆட்களின் அந்தஸ்து.

3. இரண்டாம் பிரிவின் நடைமுறைகாரணமாக இலங்கைப் பிரசையொருவராயிருக்கின்ற ஒவ்வோராளும்—

(அ) இலங்கையின் ஏனைய பிரசைகளைப் போன்று அதே முறையிலும் அத்துடன் அதே அளவிலும், பிரசாவுரிமையின் இழப்பிற்கு அல்லது ஒழிவுக்கு ஆளாதல், அத்துடன் பிரசாவுரிமையைத் துறத்தல் என்பன தொடர்பிலான சட்ட ஏற்பாடுகள் உட்பட, இலங்கைப் பிரசைகள் என்ற வகையில் சட்டத்தில் அதே கடப்பாடுகளுக்கும் பொறுப்புகளுக்கும் அமைந்தோராதல் வேண்டும்;

(ஆ) விடயத்திற்கேற்ப, அத்தகைய ஆளின் அல்லது அத்தகைய ஆளுடைய பெற்றோரின் முன்னோரின் அல்லது கணவனின் வம்சாவழியினது ஆள்புலத்தில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் அத்தகைய ஆளுக்கு இருந்திருக்கக்கூடிய, அல்லது இச்சட்டம் இல்லாதிருந்திருப்பின் அவருக்கிருந்திருக்கும் குடியியல் மற்றும் அரசியல் அந்தஸ்திற்கான எல்லா உரிமைகளையும் துறந்துள்ளாரென சட்டத்தில் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) அந்தஸ்து, ஆளுக்குரிய உரிமைகளும் கடமைகளும், அத்துடன் இலங்கையிலுள்ள ஆதனம் என்பன தொடர்பான அல்லது அவற்றுடன்சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்களிலும் இலங்கைச் சட்டங்களுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

4. (1) இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடு காரணமாக இலங்கைப் பிரசையொருவராயிருக்கின்ற ஆளெவரும், அத்தகைய ஆள் அவ்வாறு விரும்பினால், இச்சட்டத்திற்கான "அ" என்னும் அட்டவணையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள படிவத்தில் பொருளளவில் பிரசாவுரிமைச் சான்றிதழொன்றுக்கென ஆணையாளருக்கு விண்ணப்பிக்கலாம் என்பதுடன், இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, அத்தகைய விண்ணப்பம் அவருக்குக் கிடைக்கப் பெற்று அறுபது நாட்களுக்குள்ளாக அத்தகைய சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய சான்றிதழ், இச்சட்டத்திற்கான "ஆ" என்னும் அட்டவணையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள படிவத்தில் பொருளளவில் இருத்தலும் வேண்டும். பிரசாவுரிமைச் சான்றிதழ்.

(2) அத்தகைய விண்ணப்பம், இச்சட்டத்திற்கான "அ" என்னும் அட்டவணையில் எடுத்துக்காட்டப்பட்ட படிவத்தில் பொருளளவில் சத்தியத்தின் கீழான அல்லது உறுதியுரையின் கீழான வெளிப்படுத்துகையொன்றுடன், சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

(3) ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்துநாலு ஒற்றோபர் 30 இற்கு முன்பு பிறந்தவர்களான ஆட்கள் தொடர்பில், இச்சட்டம் தொடங்கும் தேதியன்று, 1967 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை இந்திய உடன்படிக்கைச் (செயற்படுத்தல்) சட்டத்தின் கீழ் சான்றிதழ்கள் வழங்கப்படாதவர்களான மீதி 469,000 ஆட்களுக்கு மாத்திரம், இச்சட்டத்தின்கீழ் சான்றிதழ்கள் வழங்குவதற்கு ஆணையாளர் தத்துவமளிக்கப்பட்டுள்ளார். அவர் (1) ஆம் உட்பிரிவின் கீழ் சான்றிதழொன்றை இவ்வெண்ணிக்கைக்குக் கூடுதலாக ஆளெவருக்கும் வழங்குவதற்கு அமைச்சரின் முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்.

(4) ஆளெவரும் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட சான்றிதழொன்றை எக்காரணத்திற்காகவும் காண்பிக்கும்படி தேவைப்படுத்தப்படுதலாகாது என்பதுடன், அதனகத்துக் கூறப்பட்டுள்ள நிகழ்வுகளுக்குச் சத்தியக் கடதாசியொன்றை முதற்றோற்றச் சான்றாக ஏற்றுக்கொள்ளுதலும் வேண்டும்.

5. நான்காம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட ஒரு விண்ணப்பத்தில் கூறப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் விபரத்தில் அறிந்துகொண்டே பொய்யான வெளிப்படுத்துகையொன்றைச் செய்கின்ற ஆளெவரும், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், சுருக்கமுறையான விளக்கத்தின்பின்னர் நீதிவானொருவரால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஓராண்டை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஐயாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்; அத்துடன் நீதிவான், அத்தகைய வெளிப்படுத்துகையின் நம்பிக்கையின்பேரில் வழங்கப்பட்ட சான்றிதழ், அத்தகைய தவறுகள்.

வெளிப்படுத்துகையிலுள்ள அத்தகைய பொய்யானகூற்று இல்லாதிருந்திருப்பின் வழங்கப்பட்டிருக்கமாட்டாதெனத் திருப்திப் படின், அத்தகைய சான்றிதழை இல்லாதொழித்து கட்டளை யொன்றை ஆக்கலாம்.

பொருள்கோடல்.

6. இச்சட்டத்தில்—

"ஆணையாளர்" என்பது, 1967 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இந்திய—இலங்கை உடன்படிக்கை செயற்படுத்தல், சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட, இந்திய வம்சாவழியினரான ஆட்களைப் பதிவுசெய்வதற்கான ஆணையாளர் என்று பொருள் படும்.

## அட்டவணை அ (பிரிவு 4)

1988 ஆம் ஆண்டின் 39ஆம் இலக்க, நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்குதல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பிரசாவுரிமைச் சான்றிதழுக்கான விண்ணப்பம்.

1.............................................. ஆகிய நான், 1988 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்குதல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பிரசாவுரிமைச் சான்றிதழொன்று வழங்கப்படுவதற்காக இத்தால் விண்ணப்பிக்கின்றேன்.

2. நான் இலங்கையில் சட்டபூர்வமாக வதியும் இந்திய வமிசாவழிப்பிரசை எனவும், நான் எக்காலத்திலும் இந்தியப்பிரசாவுரிமை வழங்குவதற்கு இந்திய தூதரகத்திற்கு விண்ணப்பிக்கவில்லை எனவும், அத்துடன் நான் 1986 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்குதல் சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள 506,000 ஆட்கள் வகுதியையோ அல்லது அவர்களின் பிள்ளை களையோ சேர்ந்தவனல்ல என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

3. 1938 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்குதல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 5 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள தவறுகளையும் தண்டனைகளையும் பற்றி நன்கு அறிவேன்.

4. நான் விண்ணப்பித்துள்ள பிரசாவுரிமைச் சான்றிதழை வழங்குவதை இயலச் செய்யும் பொருட்டு என்னைப் பற்றிய விபரங்களை நான் இத்துடன் இணைக்கின்றேன்.

5. விபரங்கள்.

(1) முழுப்பெயரும் பிறபெயர்களும், ————.
(தனித்தனி எழுத்துக்களில்)

(2) தந்தையின் பெயர் :————.

(3) தாயின் பெயர் :————.

(4) பால் :————.

(5) அடையாள அட்டை இலக்கம் (கிடைக்குமாயின்) :————.

(6) வதிவிட முகவரி :————.

(7) தொழிலும் தொழில்விட முகவரியும் :————.

(8) பிறந்த தேதி :————.
(பிறந்த தேதி தரப்படாவிடின் கிட்டிய பிறந்த ஆண்டைத் தருக)

(9) பிறந்த இடம் :————.
(இலங்கைக்கு வெளியே பிறந்திருப்பின் இலங்கைக்கு முதன்முதலாக வந்த தேதியைக் குறிப்பிடுக)

(10) குடியியல் அந்தஸ்து :————.
திருமணமானவர்/ தனியாள்/ தாரமிழந்தவர்/ விவாகரத்துப் பெற்றவர்/ பிரிந்து வாழ்வபர்..

(11) வாழ்க்கைத்துணையின் முழுப்பெயர் :————.

(12) இலங்கையில் பிறந்திருக்காவிட்டால் கடந்த இருபது ஆண்டுகளில் இருந்த வதிவிட முகவரிகள் அத்துடன் ஊழியம்/தொழில்

(13) இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இலங்கைப் பிரசாவுரிமைக்கு விண்ணப்பித்திருப்பின் எந்த முகவரியிலிருந்து விண்ணப்பம் செய்யப் பட்டதோ அந்த முகவரியும், கிடைத்தால், அதற்குக் குறித்தொதுக் கப்பட்ட தொடர்பெண்ணும்.

### வெளிப்படுத்துகை

இந்த விண்ணப்பத்தில் கூறப்பட்டுள்ள முற்போந்த விபரங்கள் உண்மையானவை யென்றும், அவை உண்மையானவையென மனமறிய நம்பிக்கொண்டு இக்கூற்றைச் செய்கிறேன் எனவும் நான் பயபக்தியாகவும், விசுவாசமாகவும் உண்மையாகவும் வெளிப்படுத்தி உறுதிப்படுத்துகிறேன்/சத்தியம் செய்கிறேன்.

விண்ணப்பகாரரின் கையொப்பம்.
அல்லது பெருவிரலடையாளம்.

தேதி :

........................................என்னும் இடத்தில் 19........ஆம் ஆண்டு ..............................ஆம் மாதம் ..............................ஆம் நாளாகிய இன்று உறுதிப்படுத்தப்பட்டது/சத்தியம் செய்யப்பட்டது.

..............................
சமாதான நீதிவானின் அல்லது
சத்திய ஆணையாளரின் கையொப்பம்.

..................................................
சமாதான நீதிவானின் அல்லது சத்திய ஆணையாளரின் பெயர்.

### அட்டவணை ஆ (பிரிவு 4)

நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்குதல் (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

1988 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, நாடற்ற ஆட்களுக்குப் பிரசவுரிமை வழங்குதல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழான இலங்கைப் பிரசாவுரிமைச் சான்றிதழ்.

.............................................. என்பவர், கீழே தரப்பட்டுள்ள விவரங்களை அவர் தொடர்பில் சார்த்துகின்றதான, சொல்லப்பட்ட சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு பிரசாவுரிமைச் சான்றிதழொன் றிற்காக இந்திய வம்சாவழி ஆட்களைப் பதிவுசெய்யும் ஆணையாளருக்கு விண்ணப்பித் துள்ளாராதலால் :

ஆகவே, இப்போது, சொல்லப்பட்ட 4 ஆம் பிரிவினால் அவருக்கு அளிக்கப்பட்ட தத்து வங்களைப் பின்பற்றி, இந்திய வம்சாவழி ஆட்களைப் பதிவுசெய்யும் ஆணையாளரான.... ..................................................................
என்பவர் சொல்லப்பட்ட ..................................................
என்பவர், சொல்லப்பட்ட 2 ஆம் பிரிவின்கீழ் இலங்கைப் பிரசை ஒருவர் என அத்தாட்சிப் படுத்துகின்றார் :

இதற்கு அத்தாட்சியாக எனது பெயரை இதற்குக் கீழொப்பமிட்டுள்ளேன்.

.......................................
இந்திய வம்சாவழி ஆட்களைப்
பதிவுசெய்வதற்கான ஆணையாளர்.

தேதி : ..................................

இந்திய வம்சாவழி ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களம்,
கொழும்பு.

**விண்ணப்பகாரர் பற்றிய விவரங்கள்**

பெயர் :————.

தந்தையின் பெயர் :————.

முகவரி :————.

முயற்சி அல்லது தொழில் :————.

பிறந்த இடமும் தேதியும் :————.

பால் :————.

அடையாள அட்டை இல :————.

மனைவியின்/கணவனின் பெயர் :————.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 177 ; (வெளிநாடு) ரூபா 236 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், 'கொழும்பு 1' என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.